# 4

# விலைகள், கூலிகள், தொழில்நிலை மற்றும் உற்பத்தித்திறன்

பொதுவிலை மட்டம் 2016இன் முதல் ஒன்பது மாதங்களில் கலப்பான அசைவுகளுடன் ஒட்டுமொத்தமாக அதிகரிக்கும் போக்கை கொண்டிருந்தது. தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் மற்றும் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் என்பவற்றின் அடிப்படையிலான பொது விலைமட்டத்தின் அசைவு பெரும்பாலும் உணவு வகையின் விலைகளின் அசைவை ஒத்திருந்தது. 2016 மே மாதத்தில் அரச வரிகளில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களுடன் உணவல்லா வகை பணவீக்கமும் அதிகரித்தது. அரச வரிகளில் அறிமுகப்படுத்தப்பட்ட மாற்றங்களின் இடைநீக்கத்தைத் தொடர்ந்து பணவீக்கத்துக்கான உணவல்லா வகையின் தாக்கம் அண்மைய மாதங்களில் மிதமடைந்தது. ஆய்வுக்குரிய காலப்பகுதியில் தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் மற்றும் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் ஆகிய இரண்டினதும் ஆண்டுக்காண்டு மாற்றத்தால் அளவிடப்படும் பணவீக்கம் மெதுவாக அதிகரிக்கும் போக்கைக் கொண்டிருந்தது. உற்பத்தியாளர் விலையின் ஆண்டுக்காண்டு அடிப்படையிலான பணவீக்கமும் ஆண்டு காலப்பகுதியில் மெதுவாக அதிகரித்ததுடன் மெதுவாக அதிகரிக்கும் போக்கினைக் கொண்டிருந்த வேளாண்மை துணைச்சுட்டெண்ணையும் ஒத்திருந்தது. கேள்விப்பக்கத்தில் தனியார் துறைக்கு வழங்கும் கடனிலான விரிவாக்கம் மற்றும் பொருளாதாரத்தில் கூலிகளிலான அதிகரிப்பு என்பனவும் விலைகள் மீது சில அழுத்தங்களைக் கொண்டிருந்தன. தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் மற்றும் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் என்பவற்றின் அடிப்படையிலான மையப்பணவீக்கம் ஆய்வுக்குரிய காலப்பகுதியில் அதிகரிக்கும் போக்கை வெளிப்படுத்தி பொருளாதாரத்தின் கேள்வி அழுத்தங்களை காட்டியிருந்தது. இதேவேளை, பணவீக்க எதிர்பார்ப்புக்கள் அண்மைக்காலத்தில் நாணய மற்றும் இறைக் கொள்கை என்பவற்றில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களுக்கான பதிலிருப்புக்களை காட்டியிருந்ததுடன் பொதுவாக நிலையாக விளங்கியது. பெயரளவு மற்றும் உண்மை நியதிகளில் அரச மற்றும் முறைசாராத் தனியார்த் துறை கூலிகள் அதிகரித்தன. இக்காலப்பகுதியில் அரசதுறை மற்றும் தனியார் துறை என்பவற்றிற்கான கூலிகளினைப் பொறுத்தமட்டில் முக்கியமான பல கொள்கை மாற்றங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. முன்னைய வருடத்தின் அதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் தொழிலின்மை வீதம் 2016இன் முதலரையாண்டில் வீழ்ச்சியடைந்தது. எனினும் தொழிற்சந்தையில் கட்டமைப்பு பிரச்சனை இருப்பதை வெளிப்படுத்தும் வண்ணம் இளைஞர், கல்வித்தகைமையுடையோர் மற்றும் பெண்களிடையே தொழிலின்மை வீதம் உயர்வாகவே காணப்பட்டது. இதேவேளை வெளிநாட்டு தொழில்நிலைக்கான வெளிச்செல்கைகள் 2016இன் முதலரையாண்டில் வீழ்ச்சியடைந்த போதிலும் நாட்டுக்கு அந்நிய செலாவணியை ஈட்டித்தரும் முக்கிய மூலமாக வெளிநாட்டு தொழில்நிலை தொடர்ந்தும் விளங்கியது. உற்பத்தித்திறனை பொறுத்தவரையில் வேலை செய்யப்பட்ட மணித்தியாலமொன்றிற்கான (2010 விலைகளில்) பெறுமதி கூட்டலால் அளவிடப்படும் உற்பத்தித்திறன் 2016இன் முதலரையாண்டில் மிதமாக அதிகரித்தது.

## 2016இன் அபிவிருத்திகள்

### விலைகள்

### பொது விலைமட்டத்தின் அசைவுகள்

- **தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் (தே.நு.வி.சு 2013=100) மற்றும் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் (கொ.நு.வி.சு 2006/07=100) என்பனவற்றின் அசைவுகளால் அளவிடப்படும் பொது விலை மட்டமானது ஆய்விற்குரிய காலப்பகுதியில் கலப்பான அசைவுகளுடன் பொதுவாக அதிகரிக்கும் போக்கினை கொண்டிருந்தது.** இரு விலைச்சுட்டெண்களும் 2016 சனவரியிலிருந்து மாச்சுக்கு வீழ்ச்சியடைந்து அதன்பின்னர் யூலை வரையில் அதிகரித்து அதன்பின்னர் 2016 செத்தெம்பர் வரையில் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்த உணவு வகையின் அசைவுகளைப் பெரும்பாலும் பின்பற்றியிருந்தன. முழுத்தீவினதும் விலை அபிவிருத்திகளை உள்ளடக்கிய தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் 2016 சனவரியில் 112.0 சுட்டெண்ணுடன் 2016 செத்தெம்பரில் 113.5 சுட்டெண்ணுக்கு அதிகரித்தது. கொழும்பு மாவட்டத்தின் நகர்ப்புறங்களின் விலை அபிவிருத்திகளை உள்ளடக்கிய கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் சனவரியில் பதிவுசெய்யப்பட்ட 184.9 சுட்டெண்ணிலிருந்து 2016 செத்தெம்பரில் 188.5 சுட்டெண்ணுக்கு அதிகரித்தது.

### முதன்மைப் பணவீக்கம்

### தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் பணவீக்கம்

- **தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் ஆண்டுக் காண்டு மாற்றத்தால் அளவிடப்படும் பணவீக்கம் 2016இன் முதல் ஒன்பது மாதங்களில் அதிகரிக்கும் போக்கினைக் கொண்டிருந்தது.** உணவு விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியாலும் உயர்ந்த தளத்தாலும் 2016 சனவரியில் ஆண்டுக்காண்டு தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் பணவீக்கம் எதிர்க்கணியமாக காணப்பட்டது. 2016 பெப்புருவரி மற்றும் மாச்சில் உணவு விலைகள் தொடர்ந்து வீழ்ச்சியடைந்த போதிலும் 2015இன் தொடர்பான காலப்பகுதியின் தாழ்ந்த அடித்தளத்தின் காரணமாக ஆண்டுக்காண்டு

வரைபடம் 4.1 முதன்மை பணவீக்கத்தின் அசைவுகள் (2015 - 2016)




அடிப்படையில் தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் அடிப்படையிலான பணவீக்கம் 2016 பெப்புருவரி முதல் அதிகரித்தது. காலநிலைக் கேள்வி மற்றும் பாதகமான வானிலைக் காரணிகளால் 2016 ஏப்பிறல் முதல் உணவு விலைகள் அதிகரிக்கத் தொடங்கியமை 2016 ஏப்பிறலில் தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் ஆண்டுக்காண்டு பணவீக்கத்தின் கூரிய அதிகரிப்புக்கு இட்டுச் சென்றது. அதன்பின்னர், தொடர்ச்சியாக அதிகரித்துச் சென்ற உணவு விலைகள் மற்றும் அரச வரிகளில் அறிமுகப்படுத்தப்பட்ட மாற்றங்கள் என்பவற்றின் காரணமாக அதிகரிக்கப்பட்ட உணவல்லா வகையின் விலைகள் என்பனவற்றின் தாக்கத்தால் தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் ஆண்டுக்காண்டு பணவீக்கம் 2016 மே மற்றும் யூனில் மேலும் அதிகரித்தது. எனினும் பிரதானமாக உணவு விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியால் ஆண்டுக்காண்டு அடிப்படையில் தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் அடிப்படையிலான பணவீக்கம் 2016 யூலை மற்றும் ஓகத்தில் வீழ்ச்சியடைந்தது. 2016 யூலையில் வரிகளிலான மாற்றங்களின் இடைநீக்கமும் இவ்வீழ்ச்சிக்கு மிதமான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. உணவு மற்றும் உணவல்லா வகை என்பவற்றின் விலை அதிகரிப்புடன் தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் அடிப்படையிலான ஆண்டுக்காண்டு பணவீக்கம் 2016 செத்தெம்பரில் அதிகரித்தது. இதேவேளை தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் அடிப்படையிலான ஆண்டுச்சராசரி பணவீக்கம் 2016இன் முதல் மூன்று மாதங்களில் வீழ்ச்சியடைந்து அதன்பின்னர் 2016 செத்தெம்பர் வரை அதிகரித்தது.

வரைபடம் 4.2 மையப் பணவீக்கத்தின் அசைவுகள் (2015-2016)




## கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் பணவீக்கம்

- **தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் ஆண்டுக்காண்டு மாற்றத்தால் அளவிடப்படும் பணவீக்கம் 2016 யூன் வரையான காலப்பகுதி வரைக்கும் அதிகரிக்கும் போக்கினை கொண்டிருந்ததுடன் பின்னர் வீழ்ச்சியடைந்தது.** 2016 சனவரி முதல் மே வரையான காலப்பகுதியில் நடு ஒற்றை இலக்கத்திற்குக் கீழாக காணப்பட்ட ஆண்டுக்காண்டு கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் 2016 யூனில் உணவு மற்றும் உணவல்லா வகையின் விலைகளின் அதிகரிப்பினாலும் 2016 யூலையில் தளத்திலான விளைவினாலும் நடு ஒற்றை இலக்க மட்டத்தைக் கடந்தது. உணவு வகையின் விலைகளில் ஏற்பட்ட கூரிய வீழ்ச்சியால் ஆண்டுக்காண்டு அடிப்படையில் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் பணவீக்கம் அதன்பின்னர் விழ்ச்சியடைந்தது. இதேவேளை கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் அடிப்படையிலான ஆண்டுச் சராசரி பணவீக்கம் 2016இன் முதல் ஒன்பது மாதங்களில் அதிகரிக்கும் போக்கை வெளிப்படுத்தியது.

## மையப் பணவீக்கம்

- **பொருளாதாரத்தில் கேள்வி அழுத்தத்தை வெளிப்படுத்தி தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அடிப்படையிலான மையப்பணவீக்கம் மற்றும் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் அடிப்படையிலான மையப்பணவீக்கம் என்பன காலப்பகுதியில் ஒப்பீட்டு ரீதியில் உயர்வாக விளங்கின.** மேலும் 2016 மே மாதத்தில் அரச வரியில்[1] மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களைத் தொடர்ந்து மையக்கூடையிலுள்ள பல்வேறு முக்கிய துணைக்குழுக்களின் விலைகள் அதிகரித்து, விலைகள் மீதான மேல்நோக்கிய அழுத்தத்தை மேலும் அதிகரித்தது. ஆண்டுக்காண்டு தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் 2016இன் சனவரியின் 3.0 சதவீதத்திலிருந்து 2016 செத்தெம்பரின் 5.7 சதவீதத்துக்கு அதிகரித்தது. ஆண்டுச்சராசரி அடிப்படையிலான தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் 2016 சனவரியின் 4.3 சதவீதத்திலிருந்து 2016 செத்தெம்பரின் 5.7 சதவீதத்துக்கு அதிகரிக்கும் போக்கைக் கொண்டிருந்தது. ஆண்டுக்காண்டு அடிப்படையிலான மையப் பணவீக்கம் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் கலப்பான போக்குகளை வெளிப்படுத்தி 2016 சனவரியின் 4.6 சதவீதத்திலிருந்து 2016 செத்தெம்பரின் 4.2 சதவீதத்திற்கு அசைந்தது. இதேவேளை ஆண்டுச்சராசரி கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் 2015 ஒத்தோபரிலிருந்து அவதானிக்கப்பட்ட அதிகரிக்கும் போக்கைத் தொடர்ந்து சனவரியின் 3.3 சதவீதத்திலிருந்து 2016 செத்தெம்பரின் 5.0 சதவீதத்திற்கு அதிகரித்தது.

1. மே மாதத்தில் அரச வரிகளில் மூன்று முக்கிய மாற்றங்கள் செயல்படுத்தப்பட்டன
   1. பெறுமதி சேர்வரி 11 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாக அதிகரிக்கப்பட்டமை.
   2. சில பொருட்கள் மற்றும் பணிகளுக்கு பெறுமதிசேர் வரிச்சலுகை நீக்கப்பட்டமை.
   3. சில பொருட்கள் மற்றும் பணிகளுக்கு நாட்டை கட்டியெழுப்பும் வரிச்சலுகை நீக்கப்பட்டமை

## வழங்கல் பக்க அபிவிருத்திகள்

## உணவு வகைகளிலான விலை அசைவுகள்

- **அதிகமாக தளம்பலடையக்கூடிய விலைகளைக் கொண்ட உணவுப்பொருட்களின் விலைகள் (தளம்பலடையும் உணவு[2]) இக்காலப்பகுதியின் உணவு பணவீக்க அதிகரிப்புக்கு பெருமளவில் பங்களித்து கலப்பான அசைவுகளை வெளிப்படுத்தியது.** சராசரியாக மரக்கறி விலைகள் முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2016இன் முதல் ஒன்பது மாதங்களில் பெரும்பாலும் பாதகமான காலநிலையால் உயர்ந்த அளவில் அதிகரித்தது. மேலும், முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியுடன்

2 அரிசி, இறைச்சி, உடன் மீன் மற்றும் கடலுணவு, தேங்காய், உடன்பழங்கள், மரக்கறி, உருளைக்கிழங்கு, வெங்காயம் மற்றும் சில பலசரக்கு வகைகள் உள்ளடங்கலாக தளம்பலடையும் உணவு.

ஒப்பிடுகையில் உடன் மீன் விலைகளும் 2016இன் முதல் ஒன்பது மாதங்களில் அதிகளவால் அதிகரித்தது. இது இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மீன் வகைகளின் மீது ஐரோப்பிய ஒன்றியம் விதித்திருந்த தடைநீக்கத்தின் காரணமாக உள்நாட்டு சந்தையில் மீன் வழங்கலில் ஏற்பட்ட வீழ்ச்சியையும் உள்ளடக்கிய பல்வேறு காரணிகளால் ஏற்பட்டது. ஏப்பிறல் முதல் மே வரையான காலப்பகுதியில் நிலவிய பாதகமான வானிலை காரணிகள் மற்றும் நிலையற்ற மீன்பிடிமுறைகள் என்பவற்றின் விளைவாக ஏற்பட்ட மீன் உற்பத்தியின் வீழ்ச்சி என்பனவும், மீன்விலைகளின் அதிகரிப்புக்கு பங்களித்தன. எனினும் அதிகமாக தளம்பலடையக்கூடிய விலைகளைக் கொண்ட உணவுப் பொருட்களின் விலை அழுத்தத்தை மிதமாக்கும் வகையில் அரிசி விலைகள் முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2016இன் முதல் ஒன்பது மாதங்களில் மிதமான வீழ்ச்சியைப் பதிவு செய்தது.

- **இறக்குமதி செய்யப்படும் உணவுப்பொருட்களின் உள்நாட்டு விலைகள் 2016இன் முதல் ஒன்பது மாதங்களில் அதிகரித்தது.** இவ்வதிகரிப்பு பன்னாட்டுச் சந்தையில் விலைகளின் கீழ்நோக்கிய போக்கு மிதமடைந்தமையாலும் மற்றும் மத்திய வங்கியால் தொகுக்கப்படும் வர்த்தகச் சுட்டெண்களின் மாற்றங்களால் பிரதிபலிக்கப்பட்டவாறு ரூபாவின் பெறுமதி தேய்வு என்பவற்றால் ஏற்பட்டது. சீனி, பருப்பு மற்றும் கோதுமை மா என்பனவற்றின் விலைகளும் 2015இன் அதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2016இன் முதல் 9 மாதங்களில் உள்நாட்டு சந்தையில் அதிகரித்தது. கோதுமை மாவின் விலை அதிகரித்ததைத் தொடர்ந்து பாண் இறாத்தல் ஒன்றின் விலையும் அதிகரித்தது. 2016 மே மாதத்தில் அரச வரிகளில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களினால் ஏற்படுத்தப்பட்ட தாக்கம் உணவு விலைகளில் சிறிதளவாகக் காணப்பட்டது.

### உணவுப் பணவீக்கம்

- **2016இன் முதல் ஒன்பது மாதங்களில் ஆண்டுக்காண்டு அடிப்படையிலான உணவுப் பணவீக்கம் மெதுவாக அதிகரிக்கும் போக்கை வெளிப்படுத்தியது.** இவ் அதிகரிப்பிற்கு தளம்பலடையக்கூடிய விலைகளைக் கொண்ட உணவுப்பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு ஏதுவாக இருந்திருக்கக்கூடிய அதேவேளை இறக்குமதி செய்யப்பட்ட உணவுப்பொருட்களின் விலைகளும் காலப்பகுதியில் அதிகரித்தது. அதிகமாக தளம்பலடையக்கூடிய விலைகளைக் கொண்ட உணவுப்பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியுடன் முன்னேற்றமடைந்த வழங்கல்பக்க காரணிகள் மற்றும் 2015இன் தொடர்பான காலப்பகுதியில் நிலவிய உயர்ந்த தளத்தின் காரணமாக 2016இன் முதல் இரு மாதங்களில் உணவுப்பணவீக்கம் சாதகமாகக் காணப்பட்டது. தொடர்ச்சியான பாதிக்கப்பட்ட உணவு வழங்கல் நிலைமைகளுடன் இணைந்த தாழ்ந்த தளத்தின் விளைவு என்பனவற்றின் காரணமாக 2016 மாச்சிலிருந்து 2016 யூன் வரை உணவுப்பணவீக்கம் அதிகரித்தது. உணவு விலைகள் சந்தைக்கு அறுவடையின் வருகையுடன் படிப்படியாக குறைவடைந்ததுடன் 2016 யூலையிலிருந்து உணவுப்பணவீக்கமும் குறைய ஆரம்பித்தது.

### உணவல்லா வகைகளின் விலை அசைவுகள்

- **உணவல்லா வகையின் துணைக்குழுக்களின் விலை நடத்தைகள் கலப்பான போக்குகளை வெளிப்படுத்தின.** உடைகள், மற்றும் காலணி, நலன், தொடர்பூட்டல், பொழுதுபோக்கு மற்றும் கலாச்சாரம் மற்றும் கல்வி ஆகிய துணைக்குழுக்களின் விலைகள் முன்னைய அதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2016 முதல் ஒன்பது மாதங்களில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்களை பதிவுசெய்தது. நலன் மற்றும் தொடர்பூட்டல் துணைக்குழுக்களில் ஏற்பட்ட அதிகரிப்புக்களுக்கு பெரும்பாலும் 2016 மே மாதத்தில் அரச வரிகளில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் காரணமாக இருந்திருக்கலாம். இதேவேளை, தளபாடம், வீட்டுப்பாவனைப் பொருள் மற்றும் வழமையான வீட்டுப்பராமரிப்பு, போக்குவரத்து, மற்றும் ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள் துணைக்குழுக்கள் சிறிதளவு அதிகரிப்புக்களைப் பதிவுசெய்தன. இருந்தபோதிலும் குடியிருப்பு, நீர், மின்வலு, வாயு மற்றும் ஏனைய எரிபொருள் துணைக்குழு சிறிதளவு வீழ்ச்சியை பதிவுசெய்தது. இது 2015இன் இறுதிக்காலப்பகுதியில் திரவ எரிபொருள் மற்றும் மண்ணெண்ணெய் என்பவற்றின் நிர்வகிக்கப்பட்ட

விலைகள் பல்வேறு சந்தர்ப்பங்களில் கீழ்நோக்கித் திருத்தப்பட்டமையால் ஏற்பட்டது. இதேவேளை 2016 ஓகத்து 1 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் பேருந்துக் கட்டணமும் 6 சதவீதத்தால் மேல்நோக்கித் திருத்தப்பட்டது.

### உணவல்லா வகை பணவீக்கம்

- **2016இன் முதல் ஒன்பது மாதங்களில் உணவல்லா வகைப் பணவீக்கம் ஆண்டுக்காண்டு அடிப்படையில் கலப்பான போக்குகளுடன் அசைந்தது.** 2016 பெப்புருவரியில் 2015இன் அதேகாலப்பகுதியில் நிலவிய தாழந்த உணவல்லாவகை விலைகளினால் உணவல்லா வகைப்பணவீக்கம் அதிகரித்தது. அதன்பின்னர் 2016 ஏப்பிறல் வரை உணவல்லா வகை பணவீக்கம் மிதமடைந்தது. அரச இறைகளில் ஏற்பட்ட மாற்றங்களினால் உணவல்லாவகைப் பணவீக்கம் 2016 மே மாதத்தில் அதிகரித்தது. இவ்வதிகரிப்பு நலன் மற்றும் தொடர்பூட்டல் துணைக்குழுக்களில் பிரதானமாக இருந்தது. இருந்தபோதிலும், யூலையில் அரச வரிகளில் ஏற்பட்ட மாற்றங்கள் இடைநீக்கப்பட்டதைத் தொடர்ந்து நலன் மற்றும் தொடர்பூட்டல் வகைகளில் பொருட்களின் விலைகள் வீழ்ச்சியடைந்தன.

### உற்பத்தியாளர் விலை பணவீக்கம்

- **உற்பத்தியாளர் விலைப் பணவீக்கம் பெரும்பாலும் மறை எல்லையில் விளங்கிய போதிலும் 2016இன் முதலரையில் பொதுவாக அதிகரிக்கும் போக்கினை வெளிப்படுத்தியது.** உற்பத்தியாளர் விலைப் பணவீக்கம் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தால் கணிப்பிடப்படும் உற்பத்தியாளரின் விலைச் சுட்டெண்ணின் (உற்பத்தியாளர் விலைச் சுட்டெண்) (2013 காலாண்டு 4=100) ஆண்டுக்காண்டு மாற்றத்தால் அளவிடப்படுகிறது. வேளாண்மை மற்றும் தயாரிப்புத்துறையின் துணைச் சுட்டெண்களின் ஆண்டுக்காண்டு மாற்றம் சில ஏற்ற இறக்கங்களுடன் பொதுவாக அதிகரிக்கும் போக்குகளைக் கொண்டிருந்தன. ஆண்டுக்காண்டு உற்பத்தியாளர் பணவீக்கம் பெரும்பாலும் வேளாண்மைத்துணைச் சுட்டெண்ணின் போக்கை தொடர்ந்ததுடன் இது நுகர்வோர் விலைச்சுட்டெண்ணிலும் அவதானிக்கப்பட்டது.

இதேவேளை, மின்சாரம், மற்றும் நீர் (பயன்பாடுகள்) துணைச்சுட்டெண்ணின் ஆண்டுக்காண்டு மாற்றம் 2016 சனவரியிலிருந்து ஏப்பிறல் வரை அதிகரிக்கும் போக்கினைக் கொண்டிருந்து பின்னர் 2016 யூனில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியுடன் வீழ்ச்சியடைந்தது. உற்பத்தி, சேகரிப்பு மற்றும் விநியோகித்தல் போன்ற துணை வகைகளில் வெப்பச்சக்தி உற்பத்தி மட்டம் அதிகரித்தமையின் விளைவாக உற்பத்திச் செலவில் ஏற்பட்ட அதிகரிப்பால் ஏற்பட்ட தள விளைவே 2016 யூனில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சிக்கு காரணமாகும்.

### விலைகள் மீதான இறைக்கொள்கை வழிமுறைகளின் தாக்கங்கள்

- **ஆய்வுக்குரிய காலப்பகுதியில் பல்வேறு இறைக்கொள்கை வழிமுறைகள் நுகர்வோர் விலைகள் மீது நேரடித்தாக்கத்தை கொண்டிருந்தன.** 2016 மேயிலிருந்து நடைமுறைக்கு வரும்வகையில் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி 11 சதவீதத்திலிருந்து 15 சதவீதத்துக்கு அதிகரிக்கப்பட்டது. இவ்வதிகரிப்புடன் நுகர்வோர் விலைச்சுட்டெண் கூடையிலுள்ள துணைத்துறைகளான நலன், தொடர்பூட்டல் மற்றும் கல்வி என்பவற்றின் மீதான பெறுமதி சேர்க்கப்பட்ட வரிவிலக்குகள் நீக்கப்பட்டன. இது துணை வகைகளிலுள்ள விலைகளை அதிகரிக்கச் செய்ததுடன் இவ்வதிகரிப்பு தொடர்பான கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் மற்றும் தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் நலன் மற்றும் தொடர்பூட்டல் துணைக்குழுக்களில் அவதானிக்கப்பட்டது. எனினும் உயர்நீதிமன்ற இடைக்கால உத்தரவைத் தொடர்ந்து 2016 யூலையில் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி அதிகரிப்பு பாராளுமன்றத்தில் சட்டமாக்கும் வரை இடைநீக்கப்பட்டது. இருந்தபோதிலும் பெறுமதிசேர் வரி அதிகரிப்பு இடைநீக்கத்தின் விளைவாக எதிர்பார்க்கப்பட்ட விலை வீழ்ச்சிகள் அவதானிக்கப்படவில்லை. இதேவேளை, அதிகரித்த வாழ்க்கைச் செலவை குறைக்கும் முகமாக அரசாங்கம் 2016 யூலை நடுப்பகுதியில் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சினூடாக 16 அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்காக உச்ச விலைகளை அறிவித்தது. மேலும், பல்வேறு இறக்குமதி செய்யப்பட்ட உணவுப்பண்டங்களின் சிறப்புப் பண்டத்தீர்வை பல்வேறு சந்தர்ப்பங்களில் வழங்கல்பக்க அபிவிருத்திகளை சமப்படுத்துவதற்காகத்

திருத்தப்பட்டது. உள்நாட்டு விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு அறுவடைக்காலங்களில் இறக்குமதி செய்யப்பட்ட பண்டங்களான உருளைக்கிழங்கு, சின்ன வெங்காயம் மற்றும் பெரிய வெங்காயம் என்பனவற்றின் சிறப்புப்பண்டத் தீர்வை இறக்குமதிகளை ஊக்கமிழக்கச் செய்வதற்காக அதிகரிக்கப்பட்டது. மேலும் உச்ச விலை அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து சில்லறை விலை வீழ்ச்சியை எளிதாக்கும் முகமாக சீனியின் சிறப்புப் பண்டத்தீர்வை குறைக்கப்பட்டது.

### கேள்விப்பக்க அபிவிருத்திகள்

- **தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடனில் ஏற்பட்ட விரிவாக்கம் மற்றும் குறிப்பாக 2015இல் மற்றும் 2016இன் ஆரம்ப காலப்பகுதியில் பொருளாதாரத்தின் கூலிகளில் ஏற்பட்ட அதிகரிப்பினால் இடம்பெற்ற உண்மை வருமானம் என்பன காலப்பகுதியில் விலைகளின் அதிகரிப்பின் மீதான கேள்விப்பக்கத்தூண்டலுக்கு குறிப்பிட்ட அளவில் பங்களித்திருந்தன.** 2012 இறுதிக்குப் பின்னர் நிலவிய உகந்த நாணயக்கொள்கைக்கு பதிலளிக்குமுகமாக தனியார் துறைக்கான கடன்கள் கடந்த இரு வருடங்களில் அதிகளவில் அதிகரித்தன. 2015இல் பொருளாதாரத்தில் குறிப்பாக அரச துறையில் கூலிகள் அதிக வீதத்தால் அதிகரித்தன. அரச துறை கூலிகளின் போக்கைத் தொடர்ந்து முறைசாராத் தனியார்துறையிலும் கூலிகள் அதிகரித்தன.

### பணவீக்க எதிர்பார்ப்புக்கள்

- **பணவீக்க எதிர்பார்க்கையானது 2016இன் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட நாணயக் கொள்கை மற்றும் இறைக்கொள்கை என்பவற்றுக்கான சில பதிலிறுப்புக்களை மாற்றங்களுக்கு ஏதுவாக வெளிப்படுத்தியிருந்தது.** ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அளவீடுகளின் அடிப்படையில் கம்பனித் துறையினுடைய அண்மைக்கால பணவீக்க எதிர்பார்க்கைகள் நிலையாகவும் குறைவாகவும் காணப்பட்டன. வீட்டுத்துறையில் அண்மைக்கால பணவீக்க எதிர்பார்க்கைகள் உயர்வாக இருந்தபோதிலும் நிலையாக விளங்கின. 2016 மேயில் இடம்பெற்ற அரச வரி மாற்றங்களுக்குப் பதிலளிக்கும் வகையில் இரு துறைகளிலுமுள்ள பதிலிறுப்பாளர்களின் அண்மைக்கால பணவீக்க எதிர்பார்ப்புக்கள் அதிகரித்தன. 2016 யூலையில் 16 முக்கிய பொருட்களுக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாட்டு விலைகள் பணவீக்க எதிர்பார்ப்புக்களை நிலைப்படுத்திய போதும் பணவீக்க எதிர்பார்ப்புக்களில் வீழ்ச்சியை ஏற்படுத்துவதில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை கொண்டிருக்கவில்லை. கம்பனித் துறையில் 6 முதல் 12 மாதங்களுக்கு முன்னோக்கிய பணவீக்க எதிர்பார்ப்புக்கள் 2015இன் இறுதிக் காலாண்டிலிருந்து மிதமாக அதிகரிக்கும் போக்கை கொண்டிருந்தது. இருந்தபோதிலும் 2016 பெப்புருவரி மற்றும் யூலையில் இடம்பெற்ற கொள்கைவீத மாற்றங்களுடன் கம்பனித் துறையின் 12 மாதங்களுக்கு முன்னோக்கிய பணவீக்க எதிர்பாக்கைகள் மிதமடைந்திருப்பதாகத் தெரிகிறது.

### கூலிகள்

- **2015ஆம் ஆண்டு மற்றும் 2016இன் ஆரம்பத்தில் அவதானிக்கப்பட்ட கூலி அதிகரிப்புக்களை தொடர்ந்து கூலி அழுத்தங்கள் பொருளாதாரத்தில் மிதமடைவதற்கான அறிகுறிகளை காட்டுகிறது.** தாழ்ந்த வேலையின்மைக்கு மத்தியில் உயர்ந்த மட்ட கூலி அதிகரிப்பானது தொழிற்சந்தை தனது சாத்திய மட்டத்தில் தொழிற்படுவதை காட்டுகின்றது. எனினும், இளைஞர் மற்றும் கல்வித்தகைமையுடையோரில் தொழிலின்மை வீதங்கள் தொழிற்சந்தையில் கட்டமைப்பு குறைபாடுகள் இருப்பதை காட்டுகின்றது.

- **ஆய்வுக்குரிய காலப்பகுதியில் அரச மற்றும் தனியார்த் துறை கூலிகளை பொறுத்தவரை குறிப்பிடத்தக்க கொள்கை மாற்றங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.** புதிய கூலி அளவீடுகளை செயன்முறைப்படுத்துவதற்காக ஒரு புதிய அரச துறை கூலி கையேடு[3] வெளிப்பட்டதுடன் 2016 சனவரி 1 இலிருந்து ஆரம்பிக்கும் வகையில் 2014 மற்றும் 2015 இல் அறிமுகப்படுத்தப்பட்ட ரூபா

3. பொது நிர்வாக சுற்றுநிரூபம் 03/2016

வரைபடம் 4.3 பெயரவு கூலி வீதச் சுட்டெண்கள் மற்றும் உண்மையான கூலிவீதச் சுட்டெண்களின் அசைவுகள் (2015-2016)




10,000 கொண்ட அடிப்படைக் கூலிக்கான இடைக்கால கொடுப்பனவு 5 கட்டங்களால் சேர்த்துக்கொள்ளப்பட்டது. அரச துறையில் கூலிகளில் உண்மையான மாற்றங்கள் 2016 மார்ச்சிலிருந்து அவதானிக்கப்பட்டது. 2016 சனவரி 1 இலிருந்து நடைமுறைக்கு வரும்வகையில் தனியார்துறைக்கு ரூபா 10,000 கொண்ட தேசிய குறைந்தபட்ச கூலி[4] சட்டபூர்வமாக்கப்பட்டது. மேலும் 2016இல் வரவு செலவுத் திட்ட நிவாரண கொடுப்பனவுக்குத்[5] தகுதியுடையோரின் உள்ளடக்கம் உச்சதொகையை ரூபா 20,000இலிருந்து ரூபா 40,000இற்கு அதிகரிப்பதன் மூலம் அதிகரிக்கப்பட்டது.

- **அரச துறை ஊழியர்களுக்கான பெயரளவு கூலிவீதச்சுட்டெண் (2012=100) 2016இன் முதல் எட்டு மாதங்களில் 5.8 சதவீதத்தால் அதிகரித்தது.** கூலிகளிலான இவ்வதிகரிப்பு 2015இன் முதல் எட்டு மாதங்களில் படிப்படியாக ரூபா 10,000இற்கு இடைக்காலக் கொடுப்பனவு அதிகரிக்கப்பட்டமை மற்றும் இடைக்கால கொடுப்பனவின் ஒரு பகுதி அடிப்படைக் கூலிக்கு சேர்த்துக்கொள்ளப்பட்டமை என்பவற்றின் காரணத்தால் 2015இன் அதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2016இன் முதல் எட்டு மாதங்களில் அதிக சராசரி கூலிச்சுட்டெண்ணுக்கு இட்டுச் சென்றிருந்தது. இதேவேளை அரச துறை ஊழியர்களின் உண்மைக்கூலிகளும் 2016இன் முதல் எட்டு மாதங்களில் 2.0 சதவீதத்தால் அதிகரித்தது. 2015இன் இதேகாலப்பகுதியில் அரச துறையின் பெயரளவு மற்றும் உண்மைக்கூலிகளும் முறையே 31.8 சதவீதத்தாலும் 26.9 சதவீதத்தாலும் அதிகரித்தமை குறிப்பிடத்தக்கது.

- **தனியார் துறை ஊழியர்களின் கூலிகள் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் அதிகரித்தன.** முறைசாராத் தனியார்த்துறை ஊழியர்களின் பெயரளவுக்கூலிகள் முறைசாரா தனியார் துறை கூலிச்சுட்டெண்ணினால் (2012=100) அளவிடப்பட்டவாறு 2015இன் முதல் எட்டு மாதங்களில் பதிவு செய்த 7.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2016இன் முதல் எட்டு மாதங்களில் 7.0 சதவீதத்தால் அதிகரித்தது. மூன்று பிரதான பொருளாதார நடவடிக்கைகளான வேளாண்மை, கைத்தொழில் மற்றும் பணிகள் என்பனவற்றின் பெயரளவுக் கூலிகள் முறையே 5.5 சதவீதம், 7.8 சதவீதம் மற்றும் 6.9 சதவீதத்தால் 2016இன் முதல் 8 மாதங்களில் அதிகரித்தன. இதேவேளை முறைசாராத் தனியார்த் துறையின் உண்மைக் கூலிகள் 2016இன் முதல் எட்டு மாதங்களில் 3.2 சதவீதத்தால் அதிகரித்தன. வேளாண்மை, கைத்தொழில் மற்றும் பணிகள் துறைகளின் ஊழியர்களின் உண்மைக்கூலிகள் முறையே 1.7 சதவீதம், 4.0 சதவீதம் மற்றும் 3.1 சதவீதத்தால் 2016இன் முதல் எட்டு மாதங்களில் அதிகரித்தன. இதேவேளை மத்திய வங்கியால் மேற்கொள்ளப்பட்ட வியாபாரத் தோற்றப்பாட்டு அளவீட்டின்படி முறைசார் தனியார்த்துறையிலும் கூலிகள் ஆண்டின் முதலரைப்பகுதியில் அதிகரித்தன. இக்கூலிகளிலான அதிகரிப்புக்கள் மூன்று பொருளாதார நடவடிக்கைகளிலும் அவதானிக்கப்பட்டது.

## தொழிற்சந்தை போக்குகள்

- **தொழிற்சந்தை குறிகாட்டிகள் தொழில் நிலையில் தேவையான தேர்ச்சி மட்டங்களில் தொடர்ச்சியான இடைவெளிகளுடன் கூடிய முன்னேற்றம் இருப்பதைக் காட்டுகின்றது.** தாழ்ந்த தொழிலின்மை வீதங்களுடன் கூடிய அதிகரிக்கும் கூலி அழுத்தங்கள், தொழிற்ச்சந்தை தனது உயர்ந்த இயலளவில் தொழிற்படுவதை குறிக்கின்றது. மறுபுறம் மத்திய வங்கியால் மேற்கொள்ளப்பட்ட வியாபார மனோபாவ

4. தொழிலாளர்களின் தேசிய குறைந்தபட்ச கூலிகள் சட்டமூலம் - 2016இன் இல 3
5. தொழிலாளர்களின் வரவு செலவுத் திட்ட நிவாரணக் கொடுப்பனவு சட்டமூலம் - 2016இன் இல 4

அட்டவணை 4.1 தொழிற்படை, தொழில் நிலை மற்றும் தொழில் வாய்ப்பின்மை (அ) (ஆ)

| விடயம் | 2015 (இ) | | 2016 | |
|---|---|---|---|---|
| | முதலாம் அரையாண்டு | ஆண்டு | முதலாம் அரையாண்டு | எறிவுகள் |
| குடும்ப அலகுகளின் குடித்தொகை '000 (15 வயதும் அதற்கு மேலும்) | 15,266 | 15,282 | 15,383 | 15,420 |
| தொழிற்படை, '000 | 8,223 | 8,214 | 8,256 | 8,172 |
| தொழில் நிலை ' 000 | 7,844 | 7,831 | 7,892 | 7,805 |
| தொழில் வாய்ப்பின்மை '000 | 379 | 383 | 364 | 368 |
| தொழிற்படை பங்கேற்பு வீதம் (குடும்ப அலகுகளின் குடித்தொகை % மாக) | 53.9 | 53.8 | 53.7 | 53.0 |
| தொழிலற்றோர் வீதம் (தொழிற்படையின் % மாக) | 4.6 | 4.7 | 4.4 | 4.5 |

(அ) தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களம் 2016 யூலையில், 2011இலிருந்தான மீள்நிறையிடப்பட்ட மற்றும் திருத்தப்பட்ட தொழிற்படை தரவுத் தொடர்புகளை வெளியிட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) திருத்தப்பட்டது

*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

அளவீடுகள், தனியார்த் துறை நிறுவனங்களுக்குரிய தேர்ச்சிபெற்ற மற்றும் தேர்ச்சியற்ற தொழிலாளரின் கிடைப்பனவில் தொடர்ச்சியாகப் பற்றாக்குறை இருப்பதைக் குறிக்கிறது. கடந்த இருவருடங்களில் தொழிலாளர்களை வேலைக்கு அமாத்துவதற்குரிய அவர்களது எண்ணங்கள் நேர்க்கணியமாக இருந்த வேளை நிறுவனங்களில் காணப்பட்ட தொழில்நிலைகள் வழக்கமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தேவையான மட்டத்தில் பற்றாக்குறையாக இருந்தது. இளைஞர் மற்றும் கல்வித்தகைமையுடையோரில் நிலவுகின்ற உயர் தொழிலின்மை வீதங்களுடன் கூடிய இவ்வபிவிருத்திகள் உள்நாட்டு தொழிற்சந்தையில் கட்டமைப்புத் தொடர்பான பிரச்சனைகளை எடுத்துக்காட்டுகிறது.

## தொழிற்படை

- **முழுத்தீவையும் உள்ளடக்கும் விதத்தில் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் நடத்தப்படும் காலாண்டு தொழிற்படை அளவீட்டின்படி, 15 வயதும் அதற்குக்கூடிய வயதுடைய பொருளாதார ரீதியாக செயற்பாட்டிலிருக்கும் குடித்தொகையை உள்ளடக்கும் தொழிற்படை 2016இன் முதலரையாண்டுப் பகுதியில் 8.256 மில்லியன் ஆட்களுக்கு 2015இன் அதேகாலப்பகுதியின் 8.223 மில்லியனிலிருந்து 0.4 சதவீதத்தால் அதிகரித்தது.**[6] தொழிற்படையில் ஆண்களின் வரவில் ஏற்பட்ட அதிகரிப்பே தொழிற்படையின் அதிகரிப்புக்குப் பிரதான காரணமாகும். பொருளாதார ரீதியில் செயற்பாட்டிலிருக்கும் ஆண்களின் குடித்தொகை அதிகரிப்புக்கு நகர மற்றும் கிராம துறைகளில் அதிகரித்த பங்களிப்பே காரணமாக இருந்த வேளையில் பெருந்தோட்டத்துறையில் பொருளாதார ரீதியில் செயற்பாட்டிக்குரிய ஆண்களின் குடித்தொகை வீழ்ச்சியடைந்தது. அனைத்து நகர, கிராமிய மற்றும் பெருந்தோட்ட துறைகளில் பெண்களின் தொழிற்பாட்டு பங்கெடுப்பு அவதானிப்புக்குரிய காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தது.

- **15 வயது மற்றும் அதற்கு மேலான வயதுடைய குடும்ப அலகுக்குடித்தொகைக்கான தொழிற்படையின் விகிதமான தொழிற்படை பங்கேற்பு வீதம் 2015இன் அதேகாலப்பகுதியின் 53.9 சதவீதத்திலிருந்து 2016இன் முதலரையாண்டுப் பகுதியில் 53.7 சதவீத்துக்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது.** இவ்வீழ்ச்சி பிரதானமாக பெண்களின் தொழிற்படை வீதம் 2015இன் முதலரையாண்டுப் பகுதியின் 36.4 சதவீதத்திலிருந்து 2016இன் முதலரையாண்டுக்கு 35.7 சதவீத்திற்கு வீழ்ச்சியடைந்தமையாலேயே ஏற்பட்டது. இதேவேளை

6 2012இல் முழுத் தீவையும் உள்ளடக்கி தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் நடாத்தப்பட்ட குடியிருப்பு மற்றும் குடித்தொகை தொகை மதிப்பைத் தொடர்ந்து பதிவாளர் நாயகத் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட நடு ஆண்டுக் குடித்தொகை மதிப்பீட்டினை பயன்படுத்தி தொழிற்படை அளவீட்டு மதிப்பீடுகள் இலங்கையில் முதன்முறையாக மீள் நிறையிடப்பட்டன. ஏனைய நாடுகளில் பின்பற்றப்படும் வகையில் தொழிற்படை மதிப்பீடுகளை அண்மையக் குடித்தொகை மதிப்பீடுகளுடன் இசையச் செய்வது இம் மீள் நிறையிடலின் நோக்கமாகும். பகுப்பாய்வு மேல் குறிப்பிடப்பட்ட மீள் நிறையிடப்பட்ட தொழிற்படை மதிப்பீடுகளின் அடிப்படையிலானது.

ஆண்களின் தொழிற்படை பங்கேற்புவீதம் 2015இன் முதலரையாண்டின் 74.3 சதவீதத்திலிருந்து 2016இன் முதலரையாண்டின் 75.2 சதவீதத்துக்கு அதிகரித்தது.

## தொழில்நிலை

- **2016இன் முதலரையாண்டுப் பகுதியில் தொழிலுக்கமர்த்தப்பட்டோரின் எண்ணிக்கை 7.892 மில்லியனுக்கு 2015இன் அதேகாலப்பகுதியின் 7.844 மில்லியனிலிருந்து 0.6 சதவீதத்தால் அதிகரித்தது.** தொழிலுக்கு அமர்த்தப்பட்டோரின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு கைத்தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டோர் 4.5 சதவீதத்தாலும் பணிகள் துறை நடவடிக்கைகளில் ஈடுபட்டோர் தொகை 4.1 சதவீதத்தாலும் 2015இன் முதலரையாண்டுடன் ஒப்பிடுகையில் அதிகரித்தமையே காரணமாகும். 2016இன் முதலரையாண்டில் கைத்தொழில் மற்றும் பணிகள் நடவடிக்கைகளில் ஏற்பட்ட அதிகரிப்புடன் இத்துறைகளில் மேலதிகமான தொழில்புரிவோரை உள்ளீர்ப்பதற்கான இயலளவும் அதிகரித்தது. இருந்தபோதிலும் பாதகமான காலநிலை நிலைமைகளால் வேளாண்மை தொடர்பான பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியைத் தொடர்ந்து வேளாண்மை நடவடிக்கைகளில் தொழிலுக்கு அமர்த்தப்பட்டோர் எண்ணிக்கை 2015இன் அதே காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது 2016இன் முதலரையாண்டுப் பகுதியில் 8.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. மொத்த தொழில்நிலையில் 46.6 சதவீதத்துக்கு வகைகூறி பணிகள் துறை தொடர்ந்தும் அதிக தொழில் வாய்ப்புக்களை வழங்கும் துறையாக விளங்கியது. வேளாண்மை மற்றும் பணிகள் துறைகள் முறையே 26.8 சதவீதம் மற்றும் 26.5 சதவீதத்துடன் பங்களித்தன.

- **தொழில்நிலை நியதிகளில் தொழில்தருநர் மற்றும் தனியார்துறை வகைகளில் தொழிலுக்கு அமாத்தப்பட்டோர் எண்ணிக்கை அதிகரித்த வேளையில் சுயதொழில்புரிவோர் அரச துறை மற்றும் பணம் செலுத்தப்படாத குடும்பத்தொழிலாளர் வகைகளில் இவ்வெண்ணிக்கை வீழ்ச்சியடைந்தது.** முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2016இன் முதலரையாண்டில் தனியார் துறையில் தொழிலுக்கமர்த்தப்பட்டோரின் எண்ணிக்கை 3.9 சதவீதத்தாலும் தொழில்தருநர்களின் எண்ணிக்கை 2.1 சதவீதத்தாலும் அதிகரித்தது. சுயதொழில்புரிவோர் மற்றும் அரச துறை வகைகள் முறையே 1.1 மற்றும் 2.4 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன. பணம் செலுத்தப்படாத குடும்ப உறுப்பினர்களின் தொகை 3.8 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. குடும்ப வேலையாட்கள் வகைகளின் பங்களிப்பின் கீழ் கருதப்படுகின்ற பெரும்பாலான நபர்கள், தொழிலுக்கு ஏற்கனவே அமர்த்தப்பட்டிருந்தமையால், வேளாண்மைத் துறையின் மெதுவடைந்து செல்லும் போக்கிற்கு இது காரணமாய் இருந்தது. பங்களிப்பு செலுத்தும் குடும்ப உறுப்பினர்களை தவிர்த்து ஏனைய துறைகளில் உள்ளோரில் 50 சதவீதத்துக்கும் அதிகமானோர் வேளாண்மை சாராத பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

- **இலங்கை மத்திய வங்கியால் நடாத்தப்படும் அரையாண்டு பொதுத்துறைத் தொழில்நிலை அளவீட்டின்படி பொதுத்துறை தொழில்நிலை 2016இன் முதலரையாண்டு முடிவில் 1.386 மில்லியனாக காணப்பட்டது.** அரசசார் தொழில்நிலை மொத்த பொதுத்துறையில் 17.4 சதவீதத்துக்கு வகைகூறிய அதேவேளை ஏனைய அரச நிறுவனங்கள் எஞ்சிய 82.6 சதவீத்துக்கு வகைகூறின. மொத்த பொதுத்துறையில் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் மாகாண சபைகள் முறையே 10.2 சதவீதம், 40.2 சதவீதம் மற்றும் 29.1 சதவீதத்துக்கு வகைகூறின. மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்கள் மொத்த பொதுத்துறையில் 3.1 சதவீதத்துக்கு வகைகூறின.

## தொழிலின்மை

- **தொழிலின்மை வீதம் 2016இன் முதலரையாண்டில் முன்னைய ஆண்டின் அதேகாலப்பகுதியின் 4.6 சதவீதத்திலிருந்து 4.4 சதவீதத்துக்கு வீழ்ச்சியடைந்தது.** ஆய்வுக்குரிய காலப்பகுதியில் மொத்த தொழிலற்றோர் எண்ணிக்கை முன்னைய ஆண்டின் அதே காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட 0.379 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 0.364 மில்லியனாக இருந்தது. இது 4.1 சதவீதம் கொண்ட வீழ்ச்சியாகும். ஆண்களின்

தொழிலின்மை வீதம் ஆய்வுக்குரிய காலப்பகுதியில் முன்னைய ஆண்டின் அதே காலப்பகுதியின் 2.9 சதவீதத்திலிருந்து 3.1 சதவீதத்துக்கு அதிகரித்தது. ஒப்பீட்டு ரீதியில் குறைந்த பெண்களின் தொழிற்படை பங்கேற்பு வீதத்துக்கு மத்தியில் இலங்கையில் பெண்களின் தொழிலின்மை வீதம் ஆண்களின் தொழிலின்மை வீதத்தின் இருமடங்காக தொடர்ந்து உயர்மட்டங்களில் விளங்குகிறது. இது குடும்ப கடமைகளால் பகுதிநேர அடிப்படை அல்லது நெகிழ்ச்சித் தன்மை அடிப்படையில் வேலை செய்வதற்கு ஏற்ற சந்தர்ப்பங்கள் இல்லாமையாலேயே ஏற்பட்டுள்ளது. இலங்கை தொழிற்சந்தையில் இத்தகைய வாய்ப்புக்கள் அரிதாகவே காணப்படுகிறது.

- **வயது அடிப்படையிலான தொழிலின்மை வீதங்களில் குறிப்பிடத்தக்க ஏற்றத்தாழ்வுகள் அவதானிக்கப்பட்டன.** 2016இன் முதலரையாண்டு காலப்பகுதியில் இளைஞர் தொழிலின்மை வீதம்[7] 21.8 சதவீதத்துடன் தொடர்ந்து அதிகமட்டத்தில் விளங்குகிறது. இவ்வயது குழுவிலிருந்து தொழிற்படைக்கான பங்கேற்பு ஒரு மில்லியனுக்கும் அதிகமானோராக குறிப்பிடத்தக்க அளவில் இருந்தது. 25-29 வயதுடையோரின் தொழிலின்மை வீதமும் 8.8 சதவீதமாக இருந்தது. மறுபுறம் 30-39 வயது மற்றும் 40 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையோரில் தொழிலின்மை வீதம் 2016இன் முதலரையாண்டில் முறையே 2.4 சதவீதம் மற்றும் 0.8 சதவீதம் கொண்ட ஒப்பீட்டு ரீதியில் குறைவான தொழிலின்மை வீதங்களை பதிவு செய்தன.

- **கல்வி மட்டங்களின் அடிப்படையில் 8.2 சதவீதம் கொண்ட அதியுச்ச தொழிலின்மை வீதமானது கல்விப் பொதுத்தராதர உயர்தரம் மற்றும் உயர்ந்த மட்ட கல்வித்தகைமை கொண்டவர்களிடையே பதிவு செய்யப்பட்டது.** இக்கல்வித்தகைமை உடையோரின் தொழிலின்மை வீதம் தொடர்ந்து உயர் தொழிலின்மை வீதங்களைப் பதிவுசெய்வது குறிப்பிடத்தக்கது. இதற்கு பெரும்பாலும் தேர்ச்சிப் பொருத்தப்பாட்டின்மையுடன் தொடர்புடைய பிரச்சினைகள், எதிர்பார்க்கப்பட்ட மற்றும் உண்மையான சம்பளப் பொதிகளிலான வேறுபாடுகள், சமூக அந்தஸ்திற்கு பொருத்தமல்லாதெனக் கருதும்

7. 15-24இற்கு இடையேயான வயது

**வரைபடம் 4.4 தொழிலின்மை வீதம் (2012-2016)**




தொழில்வாய்ப்புக்களை ஏற்பதில் உள்ள தயக்கம் மற்றும் தொழில்நிலை வரலாற்றில் கடந்தகால முரண்பாடுகள் என்பன காரணமாக இருக்கலாம். தனியார் துறையில் வாய்ப்புக்களைத் தேடாமல் வழக்கமான சமூக பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் ஏனைய நன்மைகளைக் கொண்ட அரசதுறையில் தொழிலுக்கமர்த்துவதற்கான விருப்பமும் இதற்கு காரணமாக இருக்கலாம். இதேவேளை தொழிலின்மை வீதம் 6-10 ஆண்டுகள் வரை பாடசாலையில் கல்விகற்றோரிடையே 3.3 சதவீதத்திலிருந்து 3.4 சதவீதத்துக்கு அதிகரித்த அதேவேளை இது க.பொ.த சாதாரணதரம் சித்தியடைந்தோர் மத்தியில் முன்னைய ஆண்டின் இதேகாலப்பகுதியின் 6.5 சதவீதத்திலிருந்து 5.8 சதவீதத்துக்கு வீழ்ச்சியடைந்தது.

## வெளிநாட்டுத் தொழில்நிலை

- **2016இன் முதலரைப்பகுதியில் வெளிநாட்டுத் தொழில் நிலைக்கான வெளிச்செல்கைகளில் 2015இன் அதேகாலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 10.2 சதவீதம் கொண்ட வீழ்ச்சியை வெளிநாட்டுத் தொழில்நிலையானது பதிவு செய்திருப்பினும் நாட்டிற்கு வெளிநாட்டுச் செலவாணியை ஈட்டித்தருகின்ற மூலமாக தொடர்ந்தும் விளங்கியது.** மத்திய கிழக்கில் நிலவும் பூகோள அரசியல் நிலைமை, பிரதானமாக எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் பொருளாதார மந்தநிலை மற்றும் வெளிநாட்டுப் பணிப்பெண்களின் வெளிச்செல்கைகளை நெறிப்படுத்த உள்நாட்டு அதிகார சபைகளால் எடுக்கப்பட்ட அளவீடுகள் வெளிநாட்டுத்

தொழில்நிலைக்கான வெளிச்செல்கைகளின் வீழ்ச்சிக்கு இட்டுச்சென்றது. 2016இன் முதலரைப்பகுதியில் பெண்களின் வெளிச்செல்கைகள் 12.3 சதவீதத்தாலும் ஆண்களின் வெளிச்செல்கைகள் 9.0 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்தன.

- **தேர்ச்சி வகைகளின் அடிப்படையில் அலுவலர்கள் மற்றும் மத்திய தர வகைகளின் வெளிச்செல்கைகள் அதிகரித்திருந்த அதேவேளையில் ஏனைய அனைத்து வகைகளும் வீழ்ச்சியடைந்திருந்தன.** 2015இன் முதலரைப் பகுதியுடன் ஒப்பிடும்போது மத்தியதர வகையினை சேர்ந்தவர்களின் வெளிச்செல்கைகள் 12.9 சதவீதத்தாலும் அலுவல்சார் வகையிலான வெளிச்செல்கைகள் 7.6 சதவீதத்தாலும் 2016இன் முதலரைப்பகுதியில் அதிகரித்தன. 2015இன் அதே காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது 2016இன் முதலரைப் பகுயில் எழுதுவினைஞரும் தொடர்பானோரும் மற்றும் வீட்டுப்பணிப்பெண்கள் போன்ற வகைகளுக்கு கீழான வெளிச்செல்கைகள் முறையே 21.7 சதவீதம் மற்றும் 13.0 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன. உயர்தேர்ச்சி வகைகளின் வெளிச்செல்கைகளை ஊக்குவிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகள் எதிர்காலத்தில் தொழிலாளர்களின் பணவனுப்பல்களின் உட்பாய்ச்சல்களின் வளர்ச்சியைத் தொடர்ந்து பேணுவதற்காக மேலும் பலப்படுத்தப்பட வேண்டியுள்ளது.

- **இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகமானது 2016இன் முதல் ஆறு மாதங்களில் 50 புதிய வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்களுக்கு உரிமங்களை வழங்கியதுடன் ஏற்கனவேயிருந்த 465 முகவர்களது உரிமங்களையும் புதுப்பித்திருந்தது.** இருப்பினும் தனியார் மூலங்களின் ஊடான வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கான வெளிப்பாய்ச்சல்களின் பங்கானது 2016இன் முதலரைப்பகுதியில் முன்னைய ஆண்டின் பதிவு செய்யப்பட்ட 52.7 சதவீதத்தில் இருந்து 61.7 சதவீதத்திற்கான கணிசமானதொரு அதிகரிப்பினை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் புள்ளிவிபரங்கள் காட்டியிருந்தன. இப்போக்கு தொடருமாயின் கண்காணிப்பு செயன்முறை, தொழிலாளர்களின் இடம்பெயர்வு செயன்முறையின் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் தொழிலாளர் நலனை உறுதிப்படுத்தல் என்பன எதிர்காலத்தில் சவாலாக அமையக்கூடும்.

- **மேலும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகமானது தேசிய தொழிலாளர் இடம்பெயர்வு கொள்கையின் கீழ் வழிமுறைகளை தொடர்ந்தும் அமுல்படுத்தி வருகின்றது.** இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகமானது 2016 ஆட்கடத்தல் மறுப்பு அலகு நிறுவப்பட்டமையின் ஊடாக ஆட்கடத்தல் நடவடிக்கைகளை எதிர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்திருந்த அதேவேளை நாடு தழுவிய ரீதியில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கும் எதிர்பார்த்துள்ளது. இலங்கை வேலைவாய்ப்புப் பணியகமானது 2016இன் முதல் ஆறு மாதங்களில் இலங்கை புலம்பெயர்வாளர்களுக்கு நம்பகமான வெளிநாட்டுத் தொழில் நிலையை வழங்கும் முகமாக சட்டத்துக்குப் புறம்பான ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் தொடர்பில் 122 திடீர் சோதனைகளை நடத்தியதோடு சட்டத்தை மீறிய சட்டரீதியற்ற மற்றும் உரிமம் பெற்ற முகவர்களுக்கு எதிராக 197 நீதிமன்ற வழக்குகளைப் பதிவுசெய்திருந்தது.

### தொழிலாளர் உறவுகள்

- **தொழில் திணைக்களத்திற்கு அறிக்கையிடப்பட்ட வேலை நிறுத்தங்கள் தொடர்பான புள்ளிவிபரங்களின் படி வேலைநிறுத்தங்களின் காரணத்தால் இழக்கப்பட்ட மனித நாட்களின் அடிப்படையிலான தொழிலாளர் உறவுகளானது 2015இன் முதலரைப்பகுதியின் 26,258 இலிருந்து 2016இன் முதலரைப்பகுதியின் 19,571 இற்கு 25.5 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.** தனியார் துறை நிறுவனங்களில் இடம்பெற்ற வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கையும் 22 இலிருந்து 12 இற்கு வீழ்ச்சியடைந்தன. பெருந்தோட்ட மற்றும் ஏனைய துறைகள் இரண்டிலும் வேலைநிறுத்தங்களிலான வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இருந்தபோதிலும் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளர்களின்

எண்ணிக்கை முன்னைய ஆண்டின் அதேகாலப்பகுதியின் 5,257 இலிருந்து 2016இன் முதலரைப்பகுதியில் 7,418 இற்கு அதிகரித்தது.

- **கைத்தொழில் இணக்கப்பாட்டை முன்னேற்றும் நோக்கத்தில் அமைச்சாலும் தொழிற்சங்க உறவுகளாலும் ஆய்வுக்குரிய காலத்தில் பல நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன.** அந்த வகையில் அமைச்சானது, தனியார் துறையில் வேலைத் தளத்தின் ஒத்துழைப்பு மற்றும் கைத்தொழிலின் அமைதி என்பனவற்றை முன்னேற்றும் நடவடிக்கைகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டது. இதேவேளை தொழிலாளர்களின் தேசிய குறைந்தபட்ச கூலிகள் சட்டமூலம் 2016இன் இல 3 மற்றும் தொழிலாளர்களின் வரவுசெலவுத்திட்ட நிவாரண சட்டமூலம் 2016இன் இல 04 என்பன பாராளுமன்றத்தில் 2016 மாச்சில் நிறைவேற்றப்பட்டன.

### தொழிலாளர் உற்பத்தித்திறன்

- **தற்காலிகமான தேசிய கணக்குகள் மற்றும் தொழில்நிலை மதிப்பீடுகளின்படி, வேலை செய்யப்பட்ட மணித்தியாலம் ஒன்றுக்கான (2010 விலைகளில்) அளவிடப்படும் தொழிலாளர் உற்பத்தித்திறன் 2015இன் தொடர்பான காலப்பகுதியின் ரூபா 458.00 உடன் ஒப்பிடுகையில் 2016இன் முதலரையாண்டில் ரூபா 460.91 இற்கு 0.6 சதவீதத்தால் சிறிதளவில் அதிகரித்தது.** பணிகள் துறையானது ஊழிய வளங்களை வினைத்திறனுடனும் பயன்படுவதை வெளிக்காட்டி உயர் உற்பத்தித்திறன் மட்டத்துடன் மணித்தியாலத்துக்கு ரூபா 556.84 இனை பதிவுசெய்தது. கைத்தொழில்துறை ரூபா 497.34இனைக் கொண்ட உற்பத்தித் திறன் மட்டத்தை பதிவு செய்த அதுவேளை வேளாண்மைத் துறை ஆகக்குறைந்த உற்பத்தித்திறன் மட்டமான மணித்தியாலத்துக்கு ரூபா 179.29 இனை ஆய்வுக்குரிய காலப்பகுதியில் பதிவுசெய்திருந்தது.

### எதிர்பார்க்கப்பட்ட அபிவிருத்திகள்

#### விலைகள்

- **2016இன் எஞ்சிய காலத்திலும் இடைக்காலத்திலும் பணவீக்கம் நடுஒற்றை இலக்க மட்டங்களை அண்மித்தாக விளங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.** நன்கு உறுதி செய்யப்பட்ட பணவீக்க எதிர்பார்ப்புக்கள், நாணய முகாமைத்துவத்தின் முன்னோக்கிய அணுகுமுறை மற்றும் சாதகமான உள்நாட்டு வழங்கல் நிலைமைகள் என்பன பொதுவிலை மட்டத்தை அனுகூலமான மட்டங்களில் பேணுவதற்கு உதவுமென எதிர்பார்க்கப்படுகிறது. இருந்தபோதிலும், இச்சாதகமான எதிர்பார்ப்புக்களுக்கு எதிராக பல்வேறு காரணிகளிலிருந்து விலைகள் மீது சில மேல்நோக்கிய அழுத்தங்கள் உருவாகின்றன. நுகர்வோர் பொருட்களின் பன்னாட்டு விலைகளின் கீழ்நோக்கிய அசைவில் ஏற்பட்ட சாத்தியமான திருப்பம் மற்றும் உள்நாட்டு நாணயத்தின் பலவீனம் என்பனவற்றால் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் விலை அசைவுகளால் ஏற்படும் பணவீக்க அழுத்தம் அதிகரிக்கலாம். மேலும், அரச வரியிலான மாற்றங்களுக்கு இடப்பட்டிருந்த இடைநீக்கம் நீக்கப்படுகின்ற அதேவேளை வரி வலையமைப்பில் பொருட்களின் உள்ளடக்கம் அதிகரிக்கப்படுமாயின் உணவு மற்றும் உணவல்லாவகை பணவீக்கம் ஆகிய இரண்டுமே அதிகரிக்கும். உணவல்லா வகையில் நலன், தொடர்பூட்டல் மற்றும் பயன்பாடுகள் 2016இல் அறிமுகப்படுத்தப்பட்ட அரச வரிகளினால் அதிகரித்ததுடன் இவ்வளவீடுகள் இடைநீக்கம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து வீழ்ச்சியடைந்தன. வானிலை தொடர்பான சாத்தியமான அபிவிருத்திகளால் ஏற்படக்கூடிய உடனுணவுப் பொருட்கள் குறிப்பாக மரக்கறி மற்றும் மீன் என்பனவற்றின் வழங்கல்பக்க இடையூறுகளும் உணவுப்பணவீக்கத்தை அதிகரிக்கும்.

#### கூலிகள் மற்றும் உற்பத்தித்திறன்

- **உள்நாட்டு நாணயத்தின் தேய்வானது ஏற்றுமதி போட்டித்தன்மையில் குறைந்தளவான செலவின நன்மையில் சாதகமான விளைவை ஏற்படுத்துகின்ற அதேவேளை உள்நாட்டு தொழிற்சந்தையின் உண்மைக்கூலிகளில் ஏற்பட்ட அதிகரிப்பானது சாதகத்தன்மையை பாதிக்கச் செய்யும்.** நீண்டகாலத்தில் கூலிகளின் வளர்ச்சியானது உற்பத்தியாளர்களுக்கு போட்டித்தன்மையை உறுதிசெய்வதற்காக நீண்ட காலத்தில் உற்பத்தித்திறன் வளர்ச்சியுடன் இணைந்ததாக காணப்படவேண்டும். உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு பன்னாட்டுச் சந்தைக்கான அணுகுதலை விரிவாக்குவதற்கு உற்பத்தி இயலளவும்

உற்பத்தித்திறனும் முன்னேற்றப்பட வேண்டும். உற்பத்திக்கொள்ளளவு குறுகிய காலத்தினுள் விரிவாக்கப்பட முடியாததன் காரணத்தால் குறிப்பாக வேளாண்மைத் துறையில் உற்பத்தித் திறனை முன்னேற்றுவதற்கு கவனமெடுக்கப்படல் வேண்டும். ஆகையால் பன்னாட்டுச் சந்தையில் போட்டித் தன்மையுடன் விளங்குவதற்கு கூலிகளின் மீதான சீராக்கங்கள் உற்பத்தித் திறனுடன் தொடர்புடைய ஊக்குவிப்புக்களுடன் தொடர்புபட்டிருத்தல் வேண்டும்.

## தொழிற்படை மற்றும் தொழில்நிலை

- **வயோதிபர்களுக்கு (60 வயதும் அதற்கு மேலும்) தொழிற்படை பங்கேற்பு வீதத்திலான அதிகரிப்பு வயதடைதல் இருப்பதை காட்டுவதுடன் ஓரளவுக்கு பொருளாதார மற்றும் சமூக பாதிப்புக்கள் இருப்பதையும் காட்டுகிறது.** சக பிராந்தியங்களுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் அதிக ஆயுள் எதிர்பார்ப்புடன் பரந்தளவில் அணுகக்கூடிய மற்றும் தரமான வைத்திய வசதிகள் மற்றும் குறைவடைந்து செல்லும் பிறப்பு விகிதம் என்பன வயதாகும் குடித்தொகைக்கு பங்களிப்பு செலுத்துகின்றன. தேவையான ஓய்வு முதிர்வு நன்மைகள் போதாமை மற்றும் ஓய்வூதியத்திற்கான மனரீதியான தடைகள் என்பன வயதான குடித்தொகையை தொழிற்படையில் சேர்க்கின்றது. இது அவர்களது அனுபவம் மற்றும் நிபுணத்துவங்களை பொருளாதார நடவடிக்கைகளில் பயன்படுத்துவதற்கு துணைபுரிகின்ற அதேவேளை வயதுமுதிர்ந்தோர் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றதுடன் அவர்களின் பொருளாதார மற்றும் சமூகப் பாரத்தை தணிக்கச் செய்யும். இருந்தபோதிலும் இப்போக்கு வயதுமுதிர்ந்தோரின் பொருளாதார மற்றும் சமூக பாதிப்புக்களை எடுத்துக்காட்டுவதோடு உடனடியாக வயதடையும் குடித்தொகை எதிர்காலத்தின் வேலைசெய்யும் குடித்தொகைக்கு பாரமாயிருப்பதை மோசமாக்கும்.

- **இளைஞர் மற்றும் பெண்களிடையே காணப்படும் உயர்மட்ட தொழிலின்மையானது இயலளவு பயன்பாட்டின் விரிவாக்கத்திற்கு தொழிற்சந்தையில் தொடர்ச்சியான ஊழியக்கிடைப்பனவுத்தன்மை இருப்பதைக் காட்டுவதுடன் தேவையானளவு பயிற்சி மற்றும் தேர்ச்சிப் பொருத்தப்பாடும் காணப்படுவதனையும் கொண்டிருந்தது.** நாட்டின் கல்வி முறைமை தரமான தொழிற்படையை உருவாக்கும் நோக்கில் முன்னேற்றகரமான தொழில்நுட்பம் மற்றும் மென்திறன்களுடன் கூடிய வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். தொழில்முயற்சியாண்மை திறன்களானது மாணவர்களுக்கு மாணவ பருவத்தின் விடுமுறைகளின் போது திட்டங்கள் வழங்கி மாணவ வயதில் நம்பிக்கையை ஏற்படுத்துவதன் மூலம் வளர்க்கலாம். மூலதனத்துக்கான அணுகல்கள் குறைவாக இருப்பதும் இளம்முயற்சியாளர்களை ஊக்குவிப்பதில் பிரச்சனையாக உள்ளது. படித்த இளைஞர்கள் நூதனமான எண்ணங்களை கொண்டிருந்த போதும் மூலதன முரண்பாடுகளை அவர்கள் எதிர்நோக்குவதால் அவர்களது எண்ணங்கள் செயன்முறையாதல் கடினம். வெற்றிகரமான முயற்சியாண்மைகள் பொருளாதாரத்தில் பெறுமதி கூட்டலை இறுதியில் அதிகரிப்பதோடு பல்வகையான தொழில்நிலை சந்தர்ப்பங்களை ஏற்படுத்துவதன் மூலம் தொழிலின்மையை குறைப்பதற்கும் உதவும். நிதிசார் மற்றும் நிதிசாரா வியாபாரத்தை ஆரம்பிப்பதற்கான உதவிகள் புதிய முயற்சியாளரை அவர்களது வியாபாரத்தைத் தன்னம்பிக்கையுடன் தொடங்க உதவும். வெளிநாட்டு வேலைக்காகச் செல்லும் பணிப்பெண்களின் வெளிச்செல்கைகளை ஊக்கமிழக்கச் செய்ய ஆரம்பிக்கப்பட்ட அளவீடுகளால் உள்நாட்டு சந்தையில் தொழில் தேடும் பெண்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாம். தொழில்தருநர்கள் பகுதிநேர அல்லது நெகிழ்வான வேலைநேரங்கள் மற்றும் பெண்களால் எதிர்பார்க்கப்படும் வசதிகளான பாதுகாப்பான போக்குவரத்து மற்றும் தங்குமிடவசதி என்பனவற்றை ஏற்படுத்துவதன் மூலம் பெண்களின் தொழிலின்மை வீதங்களை குறைக்கலாம்.

- **உள்நாட்டுச் சந்தையில் தனியார்த் துறை நிறுவனங்கள் செயற்படுவதற்குத் தேர்ச்சிபெற்ற மற்றும் தேர்ச்சிபெறா தொழிலாளரின் வழங்கல் குறைபாடாக உள்ளது.** மத்திய வங்கியின் வியாபாரத் தோற்றப்பாடு அளவீட்டில் தொழில்தருநர்கள் தொடர்ச்சியாக இதை முன்னிலைப்படுத்தியிருக்கிறார்கள். உள்நாட்டு தொழிற்சந்தையில் கட்டமைப்பு பிரச்சனையாக தொடர்ச்சியாக கேள்வி நிரம்பலுக்கு இடையில் இருக்கும்

தேர்ச்சி மற்றும் தோற்றப்பாட்டு பொருத்தமின்மையால் இப்பிரச்சனை எழுத்துள்ளது. இக்கட்டமைப்புப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு நாட்டின் கல்விமுறைமை நீண்டகால இலக்குடன் நவீனப்படுத்தப்படவேண்டும். மேலும், அதிக தொழிலாளர் தேவைப்படும் நிறுவனங்கள் அதிக தொழிலாளர் வழங்கல் இருக்கும் பிரதேசங்களுக்கு நிறுவனத்தின் தொழிற்பாடுகளை பரவலாக்குவதன் மூலம் தொழிலாளர் வழங்கல் பிரச்சனையைத் தீர்க்கலாம்.

- **15-59 வயதுடையோரில் நிலவும் நாட்பட்ட நோய்கள் பொருளாதாரத்தில் நீண்டகாலத்தில் திறன் வீழ்ச்சிகளுக்கு இட்டுச் செல்லலாம்.** தொகைமதிப்பு புள்ளிவிபரத்திணைக்களத்தால் நடாத்தப்பட்ட தானாகத் தெரிவிக்கும் தேசிய நலன் அளவீட்டின்படி 15-59 வயதையுடைய பொருளாதாரத்தில் செயற்பாட்டில் இருக்கும் குடித்தொகையில் நாட்பட்ட நோய்கள் அதிகமாக நிலவுகிறது. பொருளாதாரத்தில் செயற்பாட்டிலிருக்கும் ஒருவரது நலன் தனிப்பட்ட ரீதியில் மட்டுமன்றி பொருளாதாரம் மற்றும் சமூகத்தின் ஒட்டமொத்த ரீதியில் விளைவுகளை ஏற்படுத்தும் பல நீண்டகால நலன்நிலைமைகள் வாழ்க்கைமுறையிலான வேறுபாடுகள், குறைந்த உடல்ரீதியான செயற்பாடுகள் மற்றும் ஊட்டச்சத்து குறைபாட்டால் வேலைசெய்யும் வயதிலேயே ஏற்படுகிறது. வேலைசெய்யும் வயதில் உடல் நலனை பரிசீலித்தலை ஊக்கப்படுத்துவது நலன்குறைந்த தொழிற்படையின் பாதகமான பொருளாதார மற்றும் சமூக விளைவுகளை குறைப்பதற்குத் தடுப்பு சிகிச்சைகளை மேற்கொள்ள உதவும்.